**OS.No.111/2025, Dated 29.10.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 29th day of October 2025.

**வா.சா.1 – சேகர் த/பெ. ஆறுமுகம் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது பூர்வீகம் நம்பேடு கிராமம் ஆகும். நான் பி.ஈ. படித்துள்ளேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் டி.வி முதலிய எலக்ட்ரானிக் பொருட்களை பழுது பார்க்கும் தொழில் செய்கிறேன். அந்த தொழிலையும் நான் விவசாயத்துடன் தொடந்து செய்து வருகிறேன். மேற்படி தொழில்களின் மூலம் எனக்கு மாதம் ரூ.20,000/– வருமானம் வரும். அந்த ரூ.20,000/– குடும்ப செலவிற்கே சரியாக இருக்குமா என்றால் நாங்கள் தற்போதும் கூட்டுக் குடும்பமாக தான் உள்ளோம். அதனால் எனது தகப்பனார் தான் குடும்பத்தின் வரவு செலவுகளை கவனித்து கொள்கிறார். பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் அவர் பக்கத்து ஊர்காரர் அடிக்கடி எனது தகப்பனாரிடம் வந்து பணம் வாங்கி செல்வார். எனது தகப்பனாரும் கடனுறுதி சீட்டில் எழுதி வாங்கி கொண்டு தான் கடன் கொடுப்பார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனாரிடம் பிரதிவாதி வாங்கிய கடன் தொகைகளை அவர் பைசல் செய்துவிட்டார். பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 20 வருடங்களாக தெரியும். என்னிடம் அதிகம் அவர் பேச்சு வார்த்தையில் இருந்ததில்லையா என்றால் அளவாக பேசிக்கொள்வோம். இந்த வழக்கிற்கு முன்பு நான் பிரதிவாதிக்கு எதாவது கடன் கொடுத்துள்ளேனா என்றால் கடன் கொடுத்து வாங்கியுள்ளேன். பிரதிவாதி இதற்கு முன்பு என்னிடம் ரூ.5,00,000/– கடனாக வாங்கியிருந்தார். அந்த கடனை அவர் பைசல் செய்துவிட்டார். பிரதிவாதி கான்ட்ராக்ட் வேலை செய்கிறார். அவரது தகப்பனார் செய்யும் கான்ட்ராக்ட் தொழிலில் உடன் இவர் வேலை செய்கிறார். பிரதிவாதி கஷ்டத்தில் உள்ள குடும்பத்தை சேர்ந்தவரா என்றால் இல்லை. கான்ட்ராக் தொழிலுக்காக தான் கடன் வாங்கினார். வசதி படைத்தவர். எனது ஊருக்கும்

பிரதிவாதியின் ஊருக்குமிடையே 1/2 கி.மீ. தூரம் தான் உள்ளது. என்ன பரிகாரம் கோரி பிரதிவாதியின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.1,15,000/— அவரிடமிருந்து கிடைக்க வேண்டுமென்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி அந்த பணத்தை எப்போது கேட்டார் என்றால் கடன் கொடுப்பதற்கு ஒரு நாள் முன்பு பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டிருந்தார். பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து காலை 8.00 முதல் 9.00 மணியளவில் பணம் கொடுத்தேன். அந்த கடனை நான் ரூ.500/— நோட்டுகளாகதான் கொடுத்தேன். நான் 2 பைசா வட்டிக்கு கடன் கொடுத்தேன். செல்லப்பெருமாள் மற்றும் பழனி ஆகியோர் முன்னிலையில் தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். அதில் செல்லப்பெருமாள் எனது உறவினர். பழனி எனது தெருவைச்சேர்ந்தவர். எத்தனை பாண்டில் கையொப்பம் வாங்கினேன் என்றால் ஒரு பாண்டில் தான் வாங்கினேன். எவ்வளவு ரூபாய் முத்திரை வில்லையில் நான் கையொப்பம் வாங்கினேன் என்றால் பொதுவாக பாண்டில் ஒட்டும் வில்லையில் தான் கையொப்பம் வாங்கினேன். அது எவ்வளவு ரூபாய் வில்லை என்று எனக்கு தெரியவில்லை. அந்த பாண்டை நான் தான் வாங்கி வந்தேன். அந்த பாண்டில் பூர்த்தி செய்த பின்னிட்டு தான் பிரதிவாதி கையொப்பம் செய்தார். யார் பூர்த்தி செய்தார் என்றால் யார் பூர்த்தி செய்தது என்று நான் கவனிக்கவில்லை. அந்த பாண்டில் சாட்சி கையெழுத்து யார் யார் போட்டார்கள் என்றால் செல்லப்பெருமாள் மற்றும் பழனி தான் போட்டார்கள். அந்த சாட்சி கையொப்பத்தை அன்றைய தினமே வாங்கிவிட்டேன். இதற்கு முன்பு வேறு நபர்களுக்கு நான் கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு வருவதற்கு முன்பே பாண்டை பூர்த்தி செய்து எடுத்து வந்தாரா என்றால் இல்லை. எனது வீட்டில் வைத்து தான் பூர்த்தி செய்தார்கள். பாண்டை பூர்த்தி செய்த நபருக்கு நான் விபரங்கள் சொன்னேன் என்றால் இல்லை. பிரதிவாதி தான் சொன்னார்.

பிரதிவாதி எங்களது நிலத்தில் வயல் வேலை செய்வாரா என்றால் எங்கள் நிலத்தில் அவர் வேலை பார்த்ததில்லை. பொதுவாக அவர் வயல் வேலை செய்வார். இதுவரை பிரதிவாதி எனக்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதியின் தகப்பனார் ரூ.5,00,000/- எனது தகப்பனாரிடம் வாங்கியுள்ளார். அதையும் திருப்பி கொடுக்கவில்லை என்று எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியிடம் எனது தகப்பனார் ஒரு சவரன் நகையையும் கொடுத்துள்ளார். அது மோதிரம் ஆகும். நகையை கொடுக்கும்போது பாதுகாப்பிற்காக கடனுறுதி சீட்டில் கையெழுத்து வாங்கி வைத்துக்கொள்வோமா என்றால் இல்லை. நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தார். சுமார் 10 கடனுறுதி சீட்டிற்கு எழுதி கொடுத்து அதற்கு பணம் கொடுத்து பைசல் செய்துள்ளார். கடைசியாக என்னிடமும், எனது தந்தையிடமும் வாங்கிய தொகைக்கு தான் பைசல் செய்யவில்லை. பிரதிவாதியின் தந்தை வாங்கிய கடனுக்கு பிரதிவாதியிடமும் பாண்டில் கையெழுத்து வாங்கி வைப்போமா என்றால் இல்லை. பிரதிவாதியின் தகப்பனாரின் பேரில் ஆரணி நீதிமன்றத்தில் எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு அசல் ரூ.5,00,000/- ம் மற்றும் வட்டி தொகைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கிற்கு நான் எப்போதும் சென்றதில்லை. பிரதிவாதியிடம் பணம் கேட்டு நான் எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. அதில் வட்டியுடன் சேர்த்து எவ்வளவு ரூபாய் தரவேண்டுமென்று குறிப்பிட்டு தான் அனுப்பியுள்ளோம். தொகை சரியாக ஞாபகம் இல்லை. நான் அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்பதற்கு அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ஏற்கனவே பிரதிவாதி பெற்ற ரூ.5 லட்சத்திற்கான கடனுறுதி சீட்டை நான் கொடுக்கவில்லை என்று எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், ஏற்கனவே ரூ.5 லட்சத்தை பிரதிவாதி திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும், கடனுறுதி சீட்டை

திருப்பி கொடுக்கவில்லை என்று அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. அந்த ரூ.5 லட்சத்திற்கான கடனுறுதி சீட்டு என்னிடம் உள்ளதா என்றால் எனது தகப்பனாருக்கு கொடுத்த கடனுறுதி சீட்டு நீதிமன்றத்தில் உள்ளது. எனக்கு எழுதி கொடுத்ததை நான் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன். நானும் எனது தகப்பனாரும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பதிவேடுகள் பராமரிக்கின்றோமா என்றால் இல்லை. நான் அறிவிப்பை அனுப்பிய பின்னிட்டு பிரதிவாதி பைசல் செய்த கடனுக்கு எதற்காக அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று கேட்டதற்கு அதன் பேரில் நடவடிக்கை எடுக்க மாட்டேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டை திருப்பி கொடுக்காமல் மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதி ரூ.5 லட்சம் கடன் வாங்கியது குறித்து நான் தாவாவில் குறிப்பிடவில்லை. ஏற்கனவே கொடுத்த கடனுக்கு நான் வட்டிக்கு வட்டி கேட்டதால் அதை பிரதிவாதி மறுத்தார் என்பதால் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ள தேதி நேரத்தில் எவ்வித பணமும் பிரதிவாதி என்னிடம் பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை ஏமாற்றி பணம் பறிக்கும் நோக்கில் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.10.29 17:36:19 +0530

சாட்சியின் கையொப்பம்

சார்புநீதிபதி
வந்தவாசி